**செ. கு. எண்: 011** **நாள்: 17.01.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 17.1.2018

தருமபுரி மாவட்டம், வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து 19.1.2018 முதல் 25 நாட்களுக்கு, பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு ஒரு முறையும், புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு சுழற்சிமுறையில் இரண்டு நனைப்புகளுக்கு என மொத்தம் 285.70 மி.க.அடி தண்ணீரை திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தருமபுரி மாவட்டத்தில் உள்ள 10,517 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**